


தஞ்சை மத்திய மாவட்டம். தஞ்சை சட்டமன்ற தொகுதியில் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ பாக முகவர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாநில மகளிர் அணி துணைத் தலைவர் த.காரல்மார்க்ஸ். மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, மணிமாறன், கனகவள்ளி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ரமணி சுப்ரமணியன், தொண்டரணி அமைப்பாளர் கமலா ரவி, உள்ளிட்ட கழக மகளிர் மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அன்று பேரறிஞர் அண்ணா உருவாக்கிய “சீரணிப்படை”போல

# இன்று “ஸ்டாலின் மகளிர் படை”பெண்களுக்கு பெருமை சேர்க்கிறது!

## மகளிர் பயிற்சிப் பாசறை கூட்டத்தில் பூண்டி கே. கலைவாணன் பேச்சு!



திருவாரூர்,பிப்.26-

கழகத்தின் பொற்கால ஆட்சியாம் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்கள் மத்தியில் எடுத்துசெல்லும் வகையில் கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் “ஸ்டாலின் மகளிர் படை பயிற்சி பாசறை கூட்டம் ”திருவாரூர் பொன் தமிழ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த பயிற்சிபாசறை கூட்டத்தில் தலைமையேற்று பேசிய மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. குறிப்பிட்டதாவது.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் மொழி, இனம்,சுயமாரியாதையை காப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக்கழக்கத்தின் பிரதான அணியாக பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் சமூக சீர்திருத்தம் மற்றும் கொள்கைகளைப் பரப்பஅன்று தொடங்கப்பட்டது சீரணிப் படை.

இது திமுகவின் முன்னோடி அமைப்புகளில் ஒன்றாக விளங்கியது. இது வாலிபர்கள், மாணவர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கி, கழகத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், கட்சி பணிகளை வலுப்படுத்தவும் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்புப் பாசறையாகும். அப்படிப்பட்ட பெருமையை பேரறிஞர் அண்ணா , முத்தமிழ அறிஞர் கலைஞர் வழிவந்த நாம் திராவிட நாயகர் தளபதி அவர்கள் இன்று வெல்லும் தமிழ் பெண்களுக்கு பெருமை சேர்க்கும் விதமாக “ஸ்டாலின் மகளிர் படையை” உருவாக்கி வரலாற்றில் அவர்களை இடம் பெற செய்து இருக்கிறார். கழக அமைப்பில் “அணிகள்” பல இருந்தாலும் “படை” என்கிற பெருமையை மகளிருக்குத்தான் தலைவர் தளபதி அவர்கள் தந்திருக்கிறார்.

பாசிச மதவாத சக்திகளின் பிடியில் தமிழ்நாடும் தமிழ் மக்களும் சிக்கிவிடாமலும், தமிழ்நாட்டை ஒன்றிய பிஜேபி அரசிடம் அடகு வைக்கும் அடிமை கும்பலிடம் இருந்து காக்கும் விதமாகவும் பிரச்சாரத்தை இன்று நமது ஸ்டாலின் மகளிர் படை வெற்றிகரமாக தொடங்கி, 2026 லும் கழகத்தின் ஆட்சியை தொடர சிறப்போடு நடத்துகிறது என குறிப்பிட்டார்.

இந்த பயிற்சி பாசறை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ.,ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், புலிவலம் ஏ.தேவா, ஐ.வி.குமரேசன், பாலா. ஞானவேல் நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பேரூர்செயலாளர் பூண்டி. கே. கலைவேந்தன், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் விமலா பாலு, மகளிராணி அமைப்பாளர் ஷோபா கணேசன் , சிவசங்கரி மற்றும் ஸ்டாலின் மகளிர் படையினர் , வாக்குச்சாவடி முகவர்கள் பங்கேற்றனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரால் உருவாக்கப்பட்ட திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழக

# தமிழர்களின் தொன்மை கள ஆய்வில் மாணவர்கள்!

திருவாரூர்,பிப்.26-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் திருவாரூரில் அமைக்கப்பட்டது மத்திய பல்கலைக்கழகம். தமிழ் நாட்டின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் இந்த பல்கலைகழகத்தில் ஆயிரக்கணக்கான மாணவ -மாணவிகள் படித்து வருகின்றனர்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தின் சார்பில் தொல்லியல்துறை மற்றும் தமிழ்துறை மாணவர்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர், புல முதன்மையர், கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மை பட்டயப்படிப்பின் பொறுப்பாசிரியருமாகிய பேராசிரியர் ச. இரவி தலைமையில், திருநேல்வேலி அருகே பரம்புக் காட்டுப் பகுதியில் களப் பணி ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அப்போது சங்க காலத்திற்கு முற்பட்டதாக அறியப்படும் (கி.மு. 2000முன்) வீரயுக காலத்து நினைவுச் சின்னமான “நடுகல்”லை கண்டறிந்தனர். இது குறித்து பேராசிரியர் ச.இரவி கூறிப்பிட்டுள்ளதாவது .

மனோன்மணியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் மதிவாணன் மற்றும் ஆய்வாளர் மீனா பல்கலைக்கழகப் பேராசிரியர் ச.இரவி மற்றும் பேராசிரியர் பா. அருண்ராஜ் ஆகியோர் தங்களுடைய மாணவர்களுடன் களஆய்வைத் திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரி அருகே உழுக்குடி ஏரி மேற்குப் பக்கம் 150ஏக்கர் பரப்பளவு கொண்ட பரம்புக்காட்டுப் பகுதிகளில் மேற்கொண்டனர்.

அப்போது 12அடி உயரமும் 4 அடி குறுக்களவும் உடைய வீரயுக காலத்திற்குரிய மிகப்பெரிய நடுகல் அருகே 200 செ.மீ உயரமும் 150 செ.மீ அகலமும் உடைய சிறிய வகை நடுகல்லை கண்டறிந்தனர்.

மேலும் அங்கு பெருங்கற்படைக் கால நினைவுச்சின்னத்திற்குரிய 10 மீட்டர் விட்டம் கொண்ட சிதிலமடைந்த மிகப்பெரிய “கற்குவை” களை ஆராய்ந்தனர். அந்த இடத்தில் அகழாய்வு செய்தால் அதன் கீழ் கற்பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட சில கல்லறைகளைக் காண முடியும்.

இவற்றைத் தொல்லியல் ஆய்வாளர்கள் “கல்பதுக்கை”கள் என்று அழைப்பர். இதற்குச் சங்க இலக்கியங்களில் “வம்பப் பதுக்கை” போன்ற சொல்லாடல்கள் பயன்படுத்தப் பட்டிருக்கினறன. வீரயுக காலத்தில் , சங்க காலம் மற்றும் சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்தில் வீர மரணம் அடைந்தவர்களுக்கு நினைவுச் சின்னங்களை எடுக்கின்ற வழக்கம் இருந்திருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாகத், திருநேல்வேலி, ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகள் அமைகிறது.

இதே கால கட்டத்தில் திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 15 கிலோ மீட்டர் தொலைவில் உழுகுடி பரப்புக் காட்டுப் பகுதிகளில் இந்தபகுதியில் வாழ்ந்த வீரயூக கால மக்கள் இந்த நடுகற்களையும் கற்குவைகளையும் உருவாக்கி இருக்கலாம். இதில் பல சிதைந்து காணப்படுவதைத் தங்களுடைய ஆய்வுகளில் கண்டறிந்துள்ளனர்.

மேலும் இந்தபரப்புக் காட்டு பகுதியில் இரும்புக் கசடு கழிவுகள் பல இருப்பதைக் கண்டறிந்து இங்கு இப்பகுதி மக்கள் இரும்பை உருக்கி இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தி இருப்பதற்கான ஆதாரங்களையும் கண்டறிந்தனர். இதனால் திருநெல்வேலி ஆதிச்சநல்லூரின் உழுகுடி பகுதியில் வாழ்ந்திருக்கும் மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எஃகு, இரும்பு உருவாக்குகின்ற தொழில் நுட்பத்தைப் பெற்றிருகக்கலாம் என்பது அறியப்படுகிறது.

இவ்வாறு பேராசிரியர் இரவி குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் தொன்மையை உலகறிய செய்யும் தமிழ்நாடு அரசின் முயற்சியில் திருவாரூர் மத்திய பல்கலை கழகத்தின் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறும் என கூறப்படுகிறது

இந்தகளஆய்வுபணிகளில் திருவாரூர் மத்திய பல்கலைக்கழக தொல்லியல்துறை மற்றும் தமிழ் துறை மாணவ -மாணவிகள், பேராசிரியர்கள் பங்கேற்றனர்.



திருவாரூர் சட்டமன்ற தொகுதி ஸ்டாலின் மகளிர் படை பயிற்சி பாசறை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன்எம். எல்.ஏ.ஆலோசனைகள் வழங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், புலிவலம் ஏ.தேவா,ஐ.வி.குமரேசன், பாலா.ஞானவேல்நகரசெயலாளர்கள்வாரை.எஸ்.பிரகாஷ்,எஸ்.வி.பக்கிரிசாமி,பேரூர்செயலாளர்பூண்டி.கே.கலைவேந்தன், மகளிர்தொண்டரணி அமைப்பாளர் விமலாபாலு, மகளிராணிஅமைப்பாளர் ஷோபாகணேசன் , சிவசங்கரி மற்றும் மகளிர் படையினர் ,வாக்குச்சாவடி முகவர்கள் பங்கேற்றனர்.




தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மாநில விவசாயிகள் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் மாநில செயலாளர் ஏ,கே.எஸ். விஜயன் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல் காதர், ஆர்.அருட்செல்வம், கள்ளிப்பட்டி மணி, ம.முத்துராமலிங்கம், குறிஞ்சி.என்.சிவகுமார் மற்றும் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், வி.என்.மணி, தங்க சித்தார்தன், பி.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

### இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை!

# தமிழ்ச் சொந்தங்களுக்காக - நம் குரல் தொடர்ந்து ஒலிக்கும்!

## வலைதளப் பதிவில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, பிப்.26-

கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரத்தில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 90 வீடுகளைத் திறந்துவைத்த பின்னர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “இலங்கை தமிழ்ச் சொந்தங்களுக்கு நிரந்தரக் குடியுரிமை பெறும் வரை நம் குரல் தொடர்ந்து ஒலிக்கும்” எனச் சூளுரைத்துள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**இலங்கைத் தமிழ்ச் சொந்தங்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை வழங்கி வருகிறோம்!**

**நிரந்தரக் குடியுரிமையும் பெற்றுத் தரப் போராடுவோம்!**

- **இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள்,**
- **அவர்களின் குழந்தைகள் உயர் கல்வி பயில 3 கல்வியாண்டுகளில் 5,771 மாணவர்களுக்கு 11.07 கோடி ரூபாய் கல்வி உதவித் தொகை,**
- **சுயஉதவிக் குழுக்களுக்கு நிதி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி உள்ளிட்டவற்றை வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் பேணி வருகிறது, நமது திராவிடமாடல் அரசு!**

**நீண்டகாலமாக இந்திய மண்ணில் வசித்து வரும் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய குடியுரிமையை இந்திய அரசு விரைந்து வழங்கும் என எதிர்பார்க்கிறோம். அதுவரை நம் குரல் தமிழ்ச் சொந்தங்களுக்காகத் தொடர்ந்து ஒலிக்கும்!**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! கே.எஸ்.எம். நாதன் தலைமை!

# எழும்பூர் தெற்கு பகுதியில் ‘மக்கள் முதல்வரின் மனிதநேய விழா’ மாபெரும் வாழ்த்தரங்கம்!

## நடிகர் பிரபு - நடிகர் போஸ் வெங்கட் - கவிஞர் சினேகன் சிறப்புரை!

சென்னை, பிப்.26-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதியில் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2026, மனிதநேயம் 19, கழகத் தலைவர் அரசியல் திலகம்! கலையும் அன்பும் கலந்த இதயம்!! என்ற தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் இன்று வியாழக்கிழமை (26.02.2026), மாலை 6 மணிக்கு ஒய்.எம்.சி. ஏ. அரங்கம், ரித்தர்டன் சாலை, டவுட்டனில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே. எஸ். எம். நாதன் தலைமையில் மாபெரும் வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது.

இம்மாபெரும் வாழ்த்தரங்கில் திரை கலைஞர் இளைய திலகம் பிரபு, கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் நடிகர் போஸ் வெங்கட், மக்கள் நீதி மையம் இளைஞரணிச் செயலாளர் கவிஞர் சினேகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் வி. சுதாகர், சொ. வேலு எம்.சி., மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன் எம்.சி., பா. ஸ்ரீராமுலு எம்.சி., பரிதி இளம் சுருதி எம்.சி., வே. உமா காந்த், எஸ் மணிமுடி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., வானவில் விஜய், அ. நிர்மலா தேவி, கோ. மணி, எஸ் சுந்தர்ராஜன் எம்.சி., பாத்திமா முசாபர் எம்.சி.,

எழும்பூர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எஸ்.டால்பின் ஹறி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, இ. பரந்தாமன், அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.எம்.யாழினி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் 58வது வட்டச் செயலாளர் வி. விஜயகுமார், 58 (அ) வட்டச் செயலாளர் ஆர். பாபு (எ) சந்திரசேகரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தேதி மாற்றம்

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

பிப்ரவரி 27 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 28-02-2026 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் **“கலைஞர் அரங்கத்தில்”** எனது தலைமையில்;

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் - வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் என். மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் – வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ்.அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த.வனராஜ், வி.பி.மணி, இ.ராமர், க.தனசெல்வம், பெ.சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ். சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன், பி.டி. செல்வகுமார், ஜெ. பாலகங்காதரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;
2. சட்டப்பேரவைத் தேர்தலில் நமது அணியின் கோரிக்கைகள்
3. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள்
4. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.02.2026

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

### தி.மு.க மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### தி.மு.க மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிக்கை!

கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக்கூட்டம் வருகிற 26.02.2026 வியாழக்கிழமை காலை 12.00 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் **மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன், ஆர். சுரேஷ்குமார்** முன்னிலையில் நடைபெற உள்ளது. கழக மாநிலத் துணைச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: **கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள், தமிழ் மாணவர் மன்றம், மாணவர் அணியின் அடுத்தகட்ட ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 23.02.2026

**இரா.ராஜீவ்காந்தி**
செயலாளர்,
கழக மாணவர் அணி




தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி, திருச்சேறை யில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பரப்புரைக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் சபாபதி மோகன் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள். சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.